# மன்முனைப் பற்றுப் பிரதேச சபை

## மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழுங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மண்முனைப் பற்றுப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மண்முனைப் பற்றுப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.2.1 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.2 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் பொது வெளிப்படுத்தப்பட்டன.

| | சுட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பேர்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் இல. 109 | நீண்டகாலமாக ரூபா 165,500 தொகையான |

| | | |
|---|---|---|
| | | சொத்துக்களைப் பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 2.14.1 | ஐந்து மூடிய கேள்விகளின்றி வியாபார நிலையமொன்றின் நிர்மாணத்திற்காக ரூபா 213,040 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1769 ஆம் இலக்க 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக வரைதற் கட்டணங்களாக ரூபா 86,662 தொகை பொது சுகாதார பரிசோதகர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | ரூபா 5,561 தொகையான 5% நிறுத்தி வைத்தல் வரி கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவு | புத்தக வெளியீட்டிற்காக ரூபா 5,000 நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சுச் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | விசேட வர்த்தமானி அறிவித்தல் வடக்கு கிழக்கு மாகாணம் விதி 3(1) | மாதாந்த சபை அமர்வுகளில் பங்குபற்றாத உறுப்பினர்களுக்கு ரூபா 5,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | விசேட வர்த்தமானி அறிவித்தல், வடக்கு – கிழக்கு சபை, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தில் திருத்தப்பட்ட 184 ஆம் பிரிவு | சுற்றுநிருபத்திற்கு முரணாக உறுப்பினர்களுக்கு ரூபா 2,930 தொகை சிற்றுாண்டிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஏ) | பொது நிதிச் சுற்றுநிருபம் இல. பீஎப்/427 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தனியார் காப்புறுதிக் கம்பனியிடம் ரூபா 59,989 தொகையில் வாகனங்களுக்கான காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,166,251 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,523,370 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 737 | 382 | 220 | - | - | 4 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 1,830 | 1,824 | 1,396 | 1,028 | 1,129 | 368 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 550 | 370 | 718 | - | 500 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 2,036 | 1,752 | 781 | 1,959 | 1,959 | 781 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 9,608 | 12,150 | (2,542) | 8,487 | 10,846 | (2,359) |
| ஏனையவை | 7,176 | 2,867 | 4,309 | 3,384 | 2,889 | 495 |
| உப மொத்தம் | 16,784 | 15,017 | 1,767 | 11,871 | 13,735 | (1,864) |
| மூலதனச் செலவினம் | 900 | 4,918 | (4,018) | 1,050 | 3,080 | (2,030) |
| முழு மொத்தம் | 17,684 | 19,935 | (2,251) | 12,921 | 16,815 | (3,894) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர்**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| புதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 07 | 06 |

| | | |
|---|---|---|
| ஆரம்பத் தரங்கள் | 22 | 22 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 24 |
| | ---------- | ---------- |
| | 30 | 53 |
| | ==== | ==== |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 அறவிட வேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடவேண்டிய பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,093 ஆகும்.

### 2.5.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 32,010,296 ஆக இருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்